
8-2

# Jesus Picks His Disciples

## இயேசு தம்முடைய சீஷர்களை தேர்ந்தெடுத்தல்

## மாற்கு 3 : 13–19

எப்படி பரலோகத்தை அடைய முடியும் என்பதை ஜனங்களுக்கு சொல்லுவதற்கு இயேசு தூதர்களை தெரிந்தெடுத்திருந்தார் என்பதைப் பற்றி நீங்கள் நினைத்துப்பாருங்கள் ஆனால் அதற்குப்பதிலாக அவர் சாதாரணமான மனிதர்களை தேர்ந்தெடுத்தார்.

ஒரு நாள் அதிகமான ஜனங்கள் இயேசுவினுடைய உபதேசத்தை கேட்கும்படி அவரிடம் வந்தார்கள் ஆகவே பேதுரு என்று பேருள்ள ஒருவனிடத்தில் அவனுடைய படகை ஒரு இடமாக பயன்படுத்தி உபதேசிக்கட்டுமா என்று கேட்டார். இயேசு எல்லா ஜனங்களையும் தம்மை பின்பற்றும்படி எல்லா ஜனங்களுக்கும் நற்செய்தியை போதிக்கும்படி தாழ்ந்த நிலையுள்ள மீனவர்களிடத்தில் கேட்டார். எல்லாரையும் அவர் அழைத்தபின்பு "இப்பொழுது நான் உங்களை மனிதர்களை பிடிப்பவர்களாகப் மாற்றப்போகிறேன்" என்றார்.

அவர்கள் இயேசுவைக் குறித்து மற்றவர்களுக்குச்சொல்லி தேவனுடைய குடும்பத்தில் அவர்களை கொண்டு வந்தார்கள். அவர் பரலோகத்திற்கு திரும்ப போனபின்பு அவருடைய வேலையை செய்வதற்கு இயேசு அவருடைய சீஷர்களாக பன்னிரெண்டுப்பேரை தெரிந்தெடுத்தார் சரியாக இயேசு பரலோகத்திற்கு போவதற்கு முன்பாக "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் ஆமென். மத்தேயு 28 : 19–20

## ஜெபம்

ஸ்தோத்திரம் இயேசுவே நீர் எங்களுக்காக போதகர்களையும் வேதாகம ஆசிரியர்களையும் அனுப்புகிறீர் ஆகவே நாங்கள் நற்செய்தியை கேட்கும்படி அதன்மூலம் இரட்சிப்பு அடைந்து கடவுளுடைய குடும்பத்தில் ஒரு பகுதியாக மாறும்படி செய்தீர் அதற்கு உமக்கு நன்றி ஆமென்.

## வளர்ந்தவர்களுக்குரிய வேதாகம மனப்பாட வசனம் யோவான் 21 : 15,17 (இயேசு பேசினார்)

"என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக (பிள்ளைகள்) என் ஆடுகளை (வளர்ந்த பெரியவர்கள்) மேய்ப்பாயாக" அப்போஸ்தலர் 8 : 4

"சிதறிப் போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிஷேச வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" 2 தீமோத்தேயு 4 : 2

## "திரு வசனத்தைப் பிரசங்கம் பண்ணு"